# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2149/2 - 2019 නොවැම්බර් මස 11 වැනි සඳුදා - 2019.11.11

*2149/2 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16(2ஈ) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

*காங்கேசன்துறை துறைமுக மறுசீரமைப்பு செய்வதற்கான செயற்றிட்டம், யாழ்ப்பாணம்*

**சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை**

*1988 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் மூலம் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக கொழும்பு 01, வைத்திய வீதி, இல. 19 எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை துறைமுக அதிகார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட யாழ்ப்பாணம், காங்கேசன்துறை துறைமுகத்தை மறுசீரமைக்கும் செயற்றிட்டத்துக்கு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பொது மக்களின் பரிசீலனைக்காக கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் நாள் முழுவதும் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 4.15 மணி வரை 2019.11.11 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு வைக்கப்பட்டிருக்கும். (வார இறுதி மற்றும் அரச விடுமுறை நாட்களைத் தவிர).*

*இதற்கு மேலதிகமாக கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான* www.coastal.gov.lk *இல் மும்மொழிகளிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.*

| | |
|---|---|
| *(1) கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம் -* | *புதிய செயலகம், 4 ஆவது மாடி, மாளிகாவத்தை, கொழும்பு 10* |
| *(2) பிரதேச சபை* | *வலிகாமம் வடக்கு, யாழ்ப்பாணம்* |
| *(3) மாவட்டச் செயலகம் -* | *யாழ்ப்பாணம்* |
| *(4) பிரதேச செயலகம் -* | *தெல்லிப்பளை* |
| *(5) கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம் -* | *மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணம்* |
| *(6) மத்திய சுற்றாடல் அதிகார சபை -* | *இல. 104. "பரிசர பியச", டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை* |


1A - G 31428 — 37 (2019/11)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இந்த உத்தேச துறைமுகம் மறுசீரமைப்பு செய்யும் திட்டத்தினால் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பான அறிக்கை சம்பந்தமாக பொது மக்களின் கருத்துக்களை 2019.11.11 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்து மூலமாகச் சமர்ப்பிக்குமாறு அறியத்தருகிறேன்.

பி. கே. பிரபாத் சந்திரகீர்த்தி,
பணிப்பாளர் நாயகம்,
கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம்.

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம்,
4 ஆவது மாடி,
புதிய செயலகம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
தொலைபேசி இல. : 011-2449754, 011-2387922, 011-2449197.
தொலைநகல் இல. : 011-2438005, 011-2472623.

11-1395

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.